BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# மானுடவியல் நோக்கில் பெரும்பாணாற்றுப்படை உணர்த்தும்மருதநிலப் பண்பாடு

# Maanudaviyal nokkil perumpanatrupadai unarthum maruthanila panpadu

**இரா.பிரதீப் ராஜ்**

முனைவர் பட்ட ஆய்வாளர், வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்- 632014

**முனைவர் அ. மரிய செபஸ்தியான்**

உதவிப் பேராசிரியர், வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்- 632014

R. Pradeep Raj

Reg No.23PHD0428, Internal Full Time Research Scholar, Department of Tamil, Mobil No: 8438986500

School of Social Science and Language, Vellore Institute of Technology, Vellore,

Dr. A. Maria Sebastian

Associate Professor, School of Social sciences and Languages. VIT, Vellore, Tamilnadu, India.

ABSTRACT

The field of ethnography, which developed in the late twentieth century, examined elements that depict culture. Although direct field research was systematized, literary works that reflect society were also included in ethnographic research. Literatures that cover the lifestyle/behavior of prehistoric peoples, even over time, establish the period in which they arose. Ethnographic research helps to understand this period. Through it, records about some ethnic groups in the book Perumpanattarupadhi, one of the Sangam literary works, have been taken up for study. In particular, the cultural records of Maruthana are being studied. Through research conducted with an ethnographic perspective, the lifestyle of a community of people two thousand years ago can be known.

**Key words :** Perumpanatrupadai, Inavaraiviyal, Inakkuzhu, Panpattu pathivu

**ஆய்வுச்சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளர்ச்சியுற்ற துறை இனவரைவியல் துறை இத்துறையின் வாயிலாக பண்பாட்டைச் சித்தரிக்கும் கூறுகள் ஆராயப்பட்டன. நேரடிக் களஆய்வு முறைப்படுத்தப்பட்டது என்றாலும் சமூகத்தைப்பிரதிபலிக்கும் இலக்கியப் பனுவல்களும் இனவரைவியல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. வரலாற்றுக்கு முந்தைய மக்கள் வாழ்வியலை /நடத்தைகளை உள்ளடக்கிய இலக்கியங்கள், அவை எழுந்த காலக்கட்டத்தைக் காலங்கடந்தும் இறுத்தி வைக்கின்றன. இனவரைவியல் ஆய்வு, இக்காலக்கட்டத்தை அறிய உதவுகின்றது. அதன்வழி சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படை எனும் நூலில் உள்ள சில இனக்குழு மக்கள் பற்றிய பதிவுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, மருதநிலப் பண்பாட்டுப் பதிவுகள் ஆராயப்படுகிறது. இனவரைவியல் நோக்கில் செய்யப்படும் ஆய்வின் வாயிலாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு சமூக மக்களின் வாழ்வியலை அறியமுடியும்.

**திறவுச்சொற்கள்:** பெரும்பாணாற்றுப்படை இனவரைவியல், இனக்குழு, பண்பாட்டுப்பதிவு.

**முன்னுரை**

மொழியும் இலக்கியங்களும் சமூக நடத்தைகளை எதிரொளிப்பவை. நிலம் மற்றும் காலநிலைக்கு ஏற்ப இனக்குழுக்களின் சமூக நடத்தைகள் தீர்மானிக்கப்படுகின்றன. இவை ஒன்றுக்கொன்று தொடர் பில்லாமல் வேறுபட்டவனாகவே இருக்கின்றன. உலகில் இருக்கும் அனைத்து இனக்குழுக்களுக்கும் இவை பொருந்தும்.

இடப்பெயர்வின் காரணமாக ஒரு நிலப்பகுதியிலிருந்து மற்றொன்றிற்குப் புலம்பெயரும் எனக் குழுவும், தான் சென்றடையும் நில- கால நிலைக்கு ஏற்ப நடத்தைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளும் என்பதும் கவனிக்கத்தக்கது. தமிழக நிலப்பரப்பில் ஐவகை நிலங்கள், அவை கொண்டிருக்கும் முதல், கரு, உரிப்பொருள்கள் ஆகியன அவற்றின் பண்பாட்டினை எடுத்துரைக்க உதவும் கூறுகளாக எடுத்துக் கொள்ளமுடியும்.

**இலக்கியமும் மானுடவியலும் (இனவரைவியல்)**

மானுடவியலின் ஒரு பகுதியான இனவரைவியல் இலக்கியத்துடன் பொருத்த முடியுமா? அவ்வாறு பொருத்தும் போது கிடைக்கப்படும் மதிப்பீடுகள் என்ன? போன்ற கேள்விகளுக்குப் பல்வேறு ஆய்வுகளின் வழி விடைக் காணப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இனக்குழுவினை பற்றிய முழுமையான ஆய்வே இனவரைவியல் என்பது. அதற்குக் களஆய்வின் வழி தரவுகளைப் பெறுதல் என்பது நடைமுறை. ஆனால் காலத்தால் முற்பட்ட ஆனால் தற்போதும் வாழும் ஒரு இனத்தினைப் பற்றிய ஆய்விற்கு வரலாற்றுப் பதிவுகள் மட்டுமே தரவுகளாக இருக்கும். வரலாற்றினைப் பதிவு செய்துள்ள தரவுகளாகத் தொல்பொருள் ஆய்வு உள்ளிட்ட புறவயப்பட்டவைக் கிடைக்கப்பெறாத நிலையில், இலக்கியங்களில் உள்ளவற்றைத் தரவுகளாகக் கொள்ளமுடியும். இலக்கியங்கள் இயல்பான வாழ்க்கை முறையை எதிரொளிப்பவையாக இருக்கும் நிலையில், அவற்றுள் ஆழ்ந்து கிடக்கும் வாழ்க்கை முறையைக் குறிப்பிட்ட இனக்குழுவின் நடத்தைகளாக ஏற்கலாம். சங்க இலக்கியங்களும் அவ்வாறே பெற்றுள்ளன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை வாழ்க்கை முறையைக் கொண்டது தமிழ்ச்சூழல். ஒவ்வொரு நிலத்திற்கும் காலநிலை (time-climate), இடஅமைவு(space-landscape) வேறுபடும். இவை உருவாக்கும் கருப்பொருட்கள் அதாவது உயிர்ப்பொருள் (living things), உயிரில் பொருள் (non-living things) இவற்றின் நடத்தைகள் போன்ற அனைத்துமே வேறுபடும். இந்த ஐந்திணை மரபே, ஓர் இனக்குழுவின் இனவரைவியலை இயல்பாகவே பெற்றிருக்கிறது. இதனை சங்க இலக்கியங்கள் பாடுகின்றன.

இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட பண்பாட்டு உண்மைகளோடு அதே நேரத்தில் உருமாற்றப்பட்ட முறையில் இனக்குழுவில் நடத்தைகளின் தொடர்பை இலக்கியங்கள் கொண்டிருக்கின்றன. இலக்கியம் என்பது கலை வடிவான சார்புடையது. இவற்றில் ஒரு நிகழ்வு, கலைப்பூர்வமான குறிப்பீட்டுத் தன்மையில் அழகியலுக்கான இலக்கணக் கூறுகளுடன் படைக்கப்படுவது (ஆ.தனஞ்செயன்; பக். 29: 2006)

**பெரும்பாணாற்றுப்படை வெளிப்படுத்தும் மருதநிலப் பண்பாடு**

சங்க இலக்கியங்கள் பாட்டும் தொகையும். அகம், புறம் சார்ந்த பதினெட்டு நூல்கள் சுமார் ஈராயிரமாண்டுகளுக்கு முந்தைய தமிழ் மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்து காட்டுகின்றன. சங்க பாடல்களைப் இயற்றிய புலவர்கள் தம் தம் நிலத்தின் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியே எழுதியுள்ளனர். சில இடங்களில் திணை மயக்கங்களையும் காண முடிகிறது என்றாலும் அவை இயல்பாகவே நிகழும் இடப்பெயர்வாகும். பத்துப்பாட்டில் பெரும்பாணாற்றுப்படையில் மருதநில வாழ்வியலை. இனக்குழுவின் பண்பாட்டுப் பதிவுகளைக் காண முடிகிறது.

**உறைவிடம்**

வயலும் வயல் சார்ந்த இடமுமான மருதநிலம், மிகுதியான நீர்நிலைகளும் பசுமையான வயல்வெளிகளும் கொண்டது. மேலும் தோட்டங்கள். சோலைகள் என மருத நிலத்திற்கு உரிய இயற்கை அமைப்பதைக் கொண்டது.வளமுடைய ஊர்களில் உழவர் முற்றம் வைத்த வீடுகளில் வாழ்ந்தனர் என்று பெரும்பாணாற்றுப்படையில்

*பகட்டு ஆ ஈன்ற கொடு நடை குழவி*
*கவை தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்*
*ஏணி எய்தா நீள் நெடு மார்பின்*
*முகடு துமித்து அடுக்கிய பழம் பல் உணவின்*
*குமரிமூத்த கூடு ஓங்கு நல் இல்*
*தச்ச சிறாஅர் நச்ச புனைந்த*
*ஊரா நல் தேர் உருட்டிய புதல்வர் (243-49)*

இவ்வரிகளில் உழவர்களின் வீடு, அதன் முற்றித்தில் எருதின் கன்றுகட்ட நெடுதாம்புகள் ஏணி வைத்தும் ஏறமுடியாத நீண்ட உயரமுடைய நெற்கூடுகள் இருந்தன என்பதையும் அறியமுடிகிறது.

பெரும்பாணாற்றுப்படை 351- 356 (பத்துப்பாட்டு 1999) வரையுள்ள அடிகளில் மருதநிலச் சிற்றூர்கள் இருந்தன என்றும் யானையின் உடம்பு போன்ற சருச்சரையுடன் தெங்கின் காந்த மடல்களால் வேயப்பட்ட வீடுகள் இருந்தன என்றும் பூந்தோட்டங்கள். தோப்புகள் ஆகியவற்றினூடாகவும் தனித்தனியாகவும் இருந்தன என்றும் கூறப்படுகின்றன.

*குன்றுறழ் யானை மருங்கள் ஏய்க்கும்*
*வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த*
*தண்டலை உழவர் தனிமனை சேப்பின் (351)*

மருதநிலத்தில் மீளவர் வாழ்ந்தனர் அவர்கள் வலையர் எனப்பட்டனர் வஞ்சி மரக்கொம்புகள், நாட்டு வேழக்கோலையும் இழைத்து தருப்பைப் புற்களால் வேயப்பட்ட குறுகிய குடிகளில் வாழ்ந்தனர். இதனை

*குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றில்...(265)*
*கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின் (274)*

ஆகிய வரிகள் புலப்படுத்துகின்றன.

**உணவு**

வயல் வளமை சார்பான நிலம் மருதம் தொண்டை நாட்டு மருத நிலம் பதிவாகியுள்ள பெரும்பாணாற்றுப்படையின் பல உணவு வகைகளை காண முடிகிறது பொதுவாக அந்நிலத்திற்குரிய உணவு வனககள் பாடல்களில் வெளிப்படுபுறது. சிறார்கள் காலையில் பழைய சோற்றை உண்டனர் என்றும் அவலை இடித்து உண்டனர் என்றும் பெரியோர் நற்சொற்றை பெட்டைக்கோழி பொரியலுடன் என்னும் இயாநீரி வாழைப்பழம், நுங்கு வள்ளிக்கிழங்கு ஆகியனவற்றையும் உண்டனர் என்றும் அறிய முடிகிறது.

*.... சிறார் பலசொற்று அமலை (223-24)*

என்றும்

*அவவெறி உலக்கை பாடு விறந்து (226)*

என்றும்

*மல்லல் பேரூர் மடியன்மடியா*
*வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி*
*மனைவாழ் அனகிள் வாட்டொடும் பெறுகுளிர்(254-56)*

என்றும் வரிகள் சுட்டுகின்றன.

**மேலும்,**

*"போழ் வாய் வாளை நீர்நினி பிரம்பின் (287-88)*

என்னும் வரிகள் வாலை மீனை சமைத்துண்ண தூண்டில் கொண்டு பிடித்தனர் என்றும் வேதியர் வீட்டில் இராசான்னம், மாதுளம் பிஞ்சைப்பினந்து அதில் மிளகுப்பொடி கருவேப்பிலையுடன் பசுவெண்ணைக் கலந்து வேகவைக்கப்பட்ட பொறியியல் செய்யப்பட்டதாக சைவ உணவு பற்றியும் குறிப்பிடப்படுகின்றன.தொண்டைமான் இளந்திரையன் நெற்சோற்றை வடித்து, சக்கரைப் பொங்கலும் ஆக்கினான் என்றும் அவை பாணர்களின் பிள்ளைகளுக்குச் சிறிய வெள்ளிக்கலசங்களிலும் பெரியோருக்குப் பெரிய வெள்ளிக்கலங்களிலும் படைக்கப்பட்டன என்றும் பெரும்பாற்றுப்படை வரிகள் கூறுகின்றன. வணிகன் (கூவியர்) கரிய சட்டியில், இடியாப்பம் போன்ற சிற்றுண்டிகளைச் செய்தனர் என்ற குறிப்பும் கிடைக்கின்றது.

*காரகல் கூவியர் பாகொடு பிடித்த*
*இழைச்சூழ் வட்டம் பால் கலந்தவை போல் (377-378)*

மேலும்

*இல்லொடு சுற்கின் தொப்பி பருகி 9142)*

என்ற அடியிலிருந்து. தமது இல்லத்தில் சமைத்த கள்ளுகளில் இனிதாகிய நெல்லாற் செய்த கள்ளையும் உண்டனர் என அறிய முடிகிறது. வலையர் தம் உணவாக களிக் கூழை, அகன்ற தட்டில் இட்டு, உலர வைத்து, நெல் முனையை இடித்து அக்கூழில் கலப்பார் அதனை இரண்டு பகல், இரண்டு இரவு, சாடி ஒன்றில் வைப்பர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கள், 'நறும்பிழி' எனப்பட்டது. இவ்வழி மருத நிலத்தில் உள்ள ஒவ்வொரு இனமக்களின் உணவுப் பண்பாடு பற்றி அறிய முடிகிறது.

**உடை**

மாந்தர் வாழ்வில் காலம்தோறும் உடைகள் என்பது மேம்பட்டு வந்துள்ளன. ஒவ்வொரு நிலத்தின் தட்பவெட்பத்திற்கேற்ப உடைகள் மாறுகின்றன. தழை, மரப்பட்டை, தோல், நெய்த பருத்தி ஆடைகள் என ஆடைகள் வளர்ந்து வந்துள்ளன. பெரும்பாணாற்றுப்படையில் தொண்டைமான் இளந்திரையன், பரிசில் பெறவரும் பாணாரிகளுக்கு. மெல்லிய உடைகளைப் பரிசளித்துள்ளார். இதனை,

*ஆவியன்ன ஆவின் நூற்கலிங்கம் (469)* என்ற வரியும் வீரர்கள் சட்டை அணிந்தனர் என்பதை,

*அடி புதை அரணம் எய்தி படம் புக்கு*
*பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின்*
*விரவு வரி கச்சின் வெண் கை ஒள் வாள்*
*வரை ஊர் பாம்பின் பூண்டு புடை தூங்க*
*சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை (69-73)*

இதன்வழி அறியமுடிகிறது.

துணங்கைக் கூத்தாடிய பூதங்கள், துகிலை உடுத்தன என்பதை,

*கணம் கொள் சுற்றமொடு கை புணர்ந்து ஆடும்*
*துணங்கை அம் பூதம் துகில் உடுத்தவை போல் (234-35)*

எனும் அடிகளில் வெளிப்படுகிறது. இதில் துகில் என்னும் வெள்ளாடைகுறிக்கப்படுகிறது. இதனூடாக உடைப் பண்பாடு பதிவு செய்யப்படுகிறது.

**பிற பதிவுகள்**

உறைவிடம், உணவு, உடை போன்று இன்னும் பல பண்பாட்டுப்பதிவுகளும் இடம்பெற்றுள்ளன.குளம் (குட்டம்) எனும் நீர்நிலையில் வலையர் தம் குழந்தைகளுடன் மீன் பிடித்துள்ளனர்.

*புலவு நுனை பகழியும் சிலையும் மான*
*செ வரி கயலொடு பச்சிறா பிறழும்*
*மை இரும் குட்டத்து மகவொடு வழங்கி (269-71)*

மேலும்

சுனைவறந் தன்ன (10) மற்றும் பொய்கை (294) என நீர்நிலைகள் குறிக்கப்படுகின்றன. தாவர உயிர்களில், இலவமரம் (இலவத்து -83), ஈந்து (ஈச்சமரம் -86), கமுகு (7, 63, 380), குமிழ்மரம் (180), கோளி பூக்காமல் காய்க்கும் மரம். பொதுப்பெயர் எ-கா: பலா, ஆலமரம் (மா இராசமாணிக்கனார்: பக். 575:2012) சேம்பு (361), எருவை – கோரை(216), வள்ளிக்கிழங்கு (362) ஆகியனவும் மருதப் பண்பாட்டினை எடுத்துரைக்கின்றன. இதேபோல், உயிர்களில் எலி (85), வணிகத்திற்குப் பயன்படும் கழுதை (80), அணில் (83), "அணங்குடை யாளி தாக்கலின் பலவுடன்" (258), ஞமலி - நாய் (112), புரவி - குதிரை (27), முயல் (112), யானை(369, 398), விடை (ஆட்டுக்கிடாய்)-143, அன்னம் (316), சிச்சிலி (மீன்கொத்தி) - (311), மீன் (நன்னீரில் வாழும் கெண்டை மீன் -269), சுறவு (385), மகர மீன்வாய் போன்ற வடிவத்தில் மகளிரது தலைக்கோலம் அமைக்கப்பட்டது (பக். 612:2012), வாளை-284 (தூண்டில் உணவை உண்டு, தூண்டிலில் சிக்காமல் தப்பிக்கும் (பக். 613: 2012), உடும்பு (200), அரவம் - பாம்பு (373) உள்ளிட்ட உயிர்களும் பண்பாட்டுப் பதிவுகளுக்கும் மக்கள் நடத்தைகளில் நேரடியாகவும் உவமைகளாவும் பதிவு செய்துள்ளது பெரும்பாணாற்றுப்படை

**முடிவுரை**

பெரும்பாணாற்றுப்படையில் பெரும்பாணன் ஒருவன், புதிய பாணனுக்கு அறிமுகப்படுத்தும் தொண்டை நாட்டு நிலங்களும் ஊர்களும் இனவரைவியல் தரவுகளாக உள்ளன. துறையும் துறைமுகவழி, காஞ்சி உள்ளிட்ட ஊர்கள்வழியில் காண்பனவற்றைக் குறிப்பாக, மருதத்திணை மக்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளைப் பாணன் வழி கூறப்படுகிறது. கடியலூர் உருத்திரக்கண்ணனார் இந்நூலில் மருதத்திணை மட்டுமின்றி நெய்தல், முல்லை ஆகிய நிலப் பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளார். புலவரில் நோக்கத்தில் பயனிக்கும் பாடல் வரிகளில் இனவரைவியல் கூறுகளும் பயணிக்கின்றன. மானுடவியல் துறையின் ஒரு அங்கமாக விளங்கும் இனவரைவியலை இலக்கியத்துடன் பொருத்தி ஆயும்போது, குறிப்பிடப்படும் இனக்குழுவின் நடத்தையைக் காலங்கடந்தும் அறிய வாய்ப்பளிக்கிறது.

**துணைநாற்கள்**

1. Naravavelupillai. M., (1999),pattuppattu (thelivurai), mullai nilaiyam, Chennai – 600 017, tamilnadu, india.

2. சுப்பிரமணியன், க. (2010). தமிழர் வாழ்வியல் சிந்தனைகள் (சங்க காலம்). நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

3. Uma, S., & Kamali, T. (2022). The People of Marutham Land: Their Lives and Culture. *International Research Journal of Tamil*, *4*(S-12), 31–37.

4.ஸ்டாலின், செ. (2018). இனவரைவியல் நோக்கில் பெரும்பாணாற்றுப்படை மருதநிலப் பண்பாடு. *பண்பாட்டு மானிடவியல் ஆய்விதழ்*, *3*(1), 151–165

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.